# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 014/மா/2017

ஆணை எண். 067/2017

நாள் : 13/04/2017

11.01.2017 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி — தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 15,
சென்னை மாநகராட்சி. — எதிர்மனுதாரர்

"பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் பிணங்கள் புதைப்பு" என்ற தலைப்பில் 11.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியினை, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(1)–ன் கீழ் 14/2017 எண்ணிட்ட வழக்காகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி நாளிதழில் வெளியான செய்தியினைத் தொடர்ந்து, ஒக்கியம் துறைப்பாக்கம், தலைமைச் செயலக அலுவலக குடியிருப்போர் சங்கத் தலைவர் திரு தா. உலகநாதன் அவர்களும், தங்களது குடியிருப்பிற்கு அருகில் செல்லும் பக்கிங்காம் கால்வாயின் கரையில் செயல்பட்டுவரும் மயானத்தை அப்புறப்படுத்தக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். 11.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியான செய்தி மற்றும் ஒக்கியம் துறைப்பாக்கம் தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்போர் சங்கத் தலைவர் அவர்களின் முறையீடு குறித்த சோழிங்கநல்லூர் மண்டல அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு எண்.193, துறைப்பாக்கம் கணேஷ் நகர், செல்வ விநாயகா நகர் மற்றும் கற்பக விநாயகா நகர் பகுதிகளில் வசிக்கும் மக்களில் யாரேனும் காலமாகிவிட்டால் அவர்களது உடல்கள் பக்கிங்காம் கால்வாய் அருகில் சடலங்களைப் புதைக்கவும் எரிக்கவும் செய்கின்றனர் என்றும் இதனால் அந்தப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் மூச்சுத்திணறல் மற்றும் தோல்நோய்கள் உள்ளிட்டவற்றால் அவதிப்படுகின்றனர் என்று 11.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியினைத் தொடர்ந்து, 194–வது வார்டுக்கு உட்பட்ட ஒக்கியம் துறைப்பாக்கம் தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்போர் சங்கத் தலைவரும் தங்களது குடியிருப்புக்கு அருகில் உள்ள பக்கிங்காம் கால்வாய் கரையில் இறந்தவர்களின் சடலங்களை எரிப்பதால் அப்புகையின் தாக்கம் தலைமைச் செயலக காலனியில் வசிப்பவர்களை மிகவும் பாதிக்கிறது என்றும் இதனால்

குழந்தைகளும் மூத்த குடிமக்கள் பலரும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவித்து அம்மயானத்தை அகற்ற ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி மற்றும் தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்போர் சங்கத் தலைவரின் முறையீடு குறித்து சோழிங்கநல்லூர் மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. மண்டல அலுவலர் தனது அறிக்கையில், சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட போது மண்டலம்–15–ல் 192 முதல் 200 வரை உள்ள கோட்ட பகுதிகள் இணைக்கப்பட்டனவென்றும், அப்பகுதிகளில் இருந்த ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வந்த 27 மயான பூமிகளில், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 193–வது கோட்டத்திற்குட்பட்ட பாண்டியன் நகர் பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் உள்ள மயானமும் அடங்கும் எனத் தெரிவித்துள்ளார். இம்மயானத்தில் 193–வது கோட்டத்திற்குட்பட்ட துரைப்பாக்கம், பாண்டியன் நகர், கணேஷ் நகர், கற்பகவிநாயகா நகர் மற்றும் கஸ்தூரிபாய் நகர் பகுதிகளில் வசித்து வரும் சுமார் 2000 குடும்பங்களைச் சார்ந்த மக்கள் தங்கள் பகுதிகளில் யாரேனும் காலமாகிவிட்டால் அவர்களது உடல்களை பாண்டியன் நகர் பக்கிங்காம் கால்வாய் கரையை ஒட்டிய பகுதியில் கடந்த 30 வருடத்திற்கு மேலாக புதைக்கவும், எரிக்கவும் செய்கின்றனர் என்றும் இப்பகுதி மக்களுக்கென வரையறுக்கப்பட்ட மயான பூமி ஏதும் இல்லாத சூழ்நிலையில் பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் எரித்தல் மற்றும் புதைத்தல் தற்பொழுதுவரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட கால்வாய் கரை ஓரத்தில் இறந்தவர்களின் சடலங்களை எரிப்பதையும், புதைப்பதையும் படிப்படியாக குறைக்கும் வகையில் இப்பகுதி மக்கள் மற்றும் கிழக்கு கடற்கரை சாலையில்வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் 196–வது கோட்டத்திற்குட்பட்ட ஈஞ்சம்–பாக்கத்தில் இலவச நவீன எரியூட்டு மயானம் அமைக்கப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது என்றும், 193–வது கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள மக்கள் இம்மயான பூமியை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் 193–வது கோட்டத்தில் பணியாற்றும் மயான உதவியாளர் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. தினமலர் நாளிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டியன் நகர் பகுதி பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் இறந்தவர்களின் சடலங்களை எரிப்பதையும் மற்றும் புதைப்பதையும் படிப்படியாக குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டல அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் திரு T.உலகநாதன் ஆகியோர் 03.04.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தனர். பெருநகர மாநகராட்சிப் பகுதிகளின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு நவீன எரியூட்டு மயானங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், பக்கிங்காம் கால்வாய் கரை ஓரத்தில் இறந்தவர்களின் உடல்களை எரியூட்டுவது மற்றும் புதைப்பது குறித்து தினமலர் நாளிதழில் செய்தி வெளியான பின்பு, ஈஞ்சம்பாக்கத்தில் நவீன எரியூட்டு மயானம் செயல்பட்டு வருவது குறித்து 193–வது கோட்டப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், தற்பொழுது அப்பகுதி மக்கள் ஈஞ்சம்பாக்கம் நவீன எரியூட்டு மயானத்தை பயன்படுத்த தொடங்கியுள்ளனர் என்று மண்டல அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், காரப்பாக்கம் கிராமத்திலும் நவீன எரியூட்டு மயானம் அமைக்கப்படவுள்ளதாகவும், அம்மயானம் செயல்பாட்டுக்கு வந்தவுடன் 193–வது கோட்டப் பகுதியில் உள்ள மக்கள் அதைப்பயன்படுத்த இயலும் என்று தெரிவித்தார் முறையீட்டு மனுதாரர் திரு T. உலகநாதன் அவர்களும் தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்புப் பகுதிக்கு அருகில் செயல்பட்டுவரும் மயானத்தை சம்பந்தப்பட்ட மக்கள் பயன்படுத்துவதை தடைசெய்ய நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

4. சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், 193–வது கோட்டப் பகுதியில் வசிக்கும் மக்கள் பக்கிங்காம் கால்வாய் கரை ஓரத்தில் இறந்தவர்களின் சடலங்களை எரிக்கவும், புதைக்கவும் செய்யும் வழக்கத்தினை நீண்ட காலமாகவே மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிய வருகிறது. இப்பகுதிகளில் வசிக்கும் அடித்தட்டு மக்களால், காலமானவர்களின் உடல்களை நீண்ட தூரத்தில் உள்ள எரியூட்டு மயானங்களுக்கு கொண்டு சென்று, இறுதிச் சடங்குகளை செய்ய இயலாத நிலையிலேயே, சடலங்களை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள கால்வாய் கரை ஓரத்தில் எரிக்கவும், புதைக்கவும் செய்கின்றனர். குளிர்விப்பான் பெட்டியுடன் கூடிய வாகன வசதியை இப்பகுதி மக்களுக்கு இலவசமாக மாநகராட்சி செய்து தருவதாக மண்டல அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், இறந்தவர்களின் உடல்களை எரிப்பதாலும், புதைப்பதாலும் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பத்திரிக்கைகள் வாயிலாகவும், சமூகத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் இப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. நவீன எரியூட்டு மயானங்களுக்கு கொண்டுவரப்படும் சடலங்களை எரியூட்டுவதற்கு எந்தவித பிரதிபலனையும் எதிர்நோக்காமல் சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மயானத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குவதுடன், சம்பந்தப்பட்ட பகுதியில் இறந்தவர்களின் சடலங்கள் எரிப்பதையும், புதைப்பதையும் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை சோழிங்கநல்லூர் மண்டல அலுவலர் விரைந்து மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டு அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13/4/17

13.4.17

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 15, சென்னை மாநகராட்சி,
எண்.120, இராஜீவ் காந்தி சாலை,
(பழைய மாமல்லபுரம் சாலை)
சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.

திரு தா. உலகநாதன், தலைவர்,
ஒக்கியம் துரைப்பாக்கம் தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்போர் சங்கம்,
எண்.673, 5–ம் பிரதான சாலை, தலைமைச் செயலக காலனி,
சென்னை – 600 097.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்